சுருக்கம்

கட்டிடங்கள் – சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் கண்காட்சிக் கூடம் மற்றும் விற்பனை வளாகத்திற்கு "அன்னை தெரசா மகளிர் வளாகம்'' எனப் பெயர் சூட்டுவதற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை

அரசாணை (1டி) எண்: 564 நாள்: 29.10.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.140, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி3) துறை, நாள் 09.10.2006.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நேர்முகக் கடிதம் எண். 395–3/ A1/2010, நாள் 18.10.2010.

********

ஆணை:-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சுனாமி அவசரகால நிதியுதவித் திட்டத்தில், வாழ்வாதார சிறப்பு கூறுகளின் கீழ் சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் 67,302 சதுர அடி பரப்பளவில் `.15.32கோடி செலவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் கண்காட்சிக் கூடம் மற்றும் விற்பனை வளாகம் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் கண்காட்சிக் கூடம் மற்றும் விற்பனை வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கட்டிடத்தினை 1.11.2010 அன்று திறப்பு விழா செய்ய உள்ளதாகவும், அக்கட்டிடத்திற்கு "அன்னை தெரசா மகளிர் வளாகம்'' எனப் பெயரிடலாம் என மாண்புமிகு துணை முதலமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார் எனவும் அவ்வாறு பெயர் சூட்டுவதற்கான அனுமதி வழங்கி அரசாணை வெளியிடுமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது கருத்துருவை மிகவும் கவனமுடன் பரிசீலித்து சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு

அருகில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான கண்காட்சிக் கூடம், விற்பனை மையம் மற்றும் அலுவலக வளாகத்திற்கு “அன்னை தெரசா மகளிர் வளாகம்” என்று பெயர் சூட்டுவதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை – 600 032.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளரது தனிச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.